# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 20.12.2024 கதிர் 86







## தொழிலதிபர் முகமது ஷியாம் கொலை வழக்கில் வாஸ் குணவர்தனவுக்கு மரண தண்டனை உறுதி!

(கொழும்பு, டிச. 20)

கொலை வழக்கொன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதிப் பொலீஸ்மாஅதிபர் வாஸ் குணவர்தன உட்பட ஐவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை மீதான மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலதிபர் முகமது ஷியாம் கொலை வழக்கு தொடர்பில் முன்னாள் பிரதி பொலீஸ்மாஅதிபர் உட்படப் பிரதிவாதிகள் ஐவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய ஆயம் விதித்த மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாகப் பிரதிவாதிகளுக்கு இன்று கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

7➤

## விபத்தில் இளைஞன் பலி

(மண்டைதீவு, டிச. 20)

யாழ்ப்பாணம் - மண்டைதீவு, மண்கும்பான் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவைச் சேர்ந்த 21 வயதான அன்ரனி பிரான்சிஸ் நிலோஜன் என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதியில் மண்கும்பான் பகுதியில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-09)



## வியட்நாம் அகதிகள் படகு திருமலையில் தரையிறக்கம்!

**- படகில் வந்தவர்களைத் தற்காலிகமாகத் தங்க வைக்க ஏற்பாடு -**

**முள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் 102 பேருடன் நேற்றுக் கரை ஒதுங்கிய மியன்மார் நாட்டுப்படகு, இன்று காலை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.**

**அந்தப் படகில் வந்த வியட்நாம் அகதிகளைத் திருகோணமலை தி/ஜமாலியா வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

7➤

## கைது செய்யப்பட்ட முன்னாள் எம்.பிக்குப் பிணை!

(வவுனியா, டிச. 20)

ஈழ மக்கள்ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன நிதி மோசடி குற் றச்சாட்டில் வவுனியாப் பொலீசாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் வவுனியாப் பொலீசாரால் இன்று காலை கைது செய்யப்பட்டிருந்தார்.

வவுனியா மாவட்ட நிதி மோசடி குற்ற விசாரணைப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் இன்று வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரைச் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

காணி பெற்றுத் தருவதாகக் கூறி நபர் ஒருவரிடம் ரூபா 15 இலட்சம் பெற்று மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்

7➤

## அர்ஜுன மகேந்திரனுக்குப் பிடியாணை

கொழும்பு, டிச. 20

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேர்ப்பச்சுவல் டிசரிஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அஜான் கார்திய புஜ்சிஹேவா ஆகியோரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இவர்கள் இருவரும், இந்த வழக்கு விசாரணைகளுக்காக நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகததன் காரணமாகவே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறபித்துள்ளது.

இந்த

7➤

## நத்தார், புது வருடத்தையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்!

கொழும்பு, டிச. 20

எதிர்வரும் நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னிட்டு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சட்டத்தரணியும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் நாட்டிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்புக்காகப் பொலீஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக மேல் மாகாணத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், "மக்கள் அதிகம் கூடும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் திருடர்கள் மற்றும் குற்றவாளிகளை அடையாளம் காண சிவில் உடையில் 500க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த முடிவு செய்துள்ளது" என்று குறிப்பிட்ட அவர்,

கத்தோலிக்க தேவாலயங்கள் உட்பட மத ஸ்தலங்களின் பாதுகாப்புக்காக நாடளாவிய

7➤

## முன்னாள் துணைவேந்தர் கடத்தல் கருணாவிடம் சி.ஐ.டி விசாரணை!

கொழும்பு, டிச. 20

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தல் தொடர்பில், கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2006ம் ஆண்டு டிசம்பர் 15 ம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் பங்குபற்றிவிட்டு கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது இனம் தெரியாத ஆயததாரிகளால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியும், இலங்கையின் முன்னாள் பிரதி

7➤

# சமூக ஊடகங்களே என் தோல்விக்குக் காரணம்: அரசியலில் தற்காலிக ஓய்வு என்கிறார் டக்ளஸ்!

(யாழ்ப்பாணம், டிச.20)

தனது தேர்தல் தோல்விக்குச் சமூக ஊடகங்களே காரணம் என்று முன்னாள் கடற்றொழில், நீரியல் வள அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,"இந்த தேர்தலில் எமக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதனை சமாளிக்க அரசியலில் தற்காலிக ஓய்வு என்றும் கூறலாம். அமைச்சராக இருந்த போது, தலைக்கு மேலாக வேலை இருந்தது. தற்போது அது இல்லை.

இதனால் கட்சிக்குள் உள்ள குறைப்பாடுகளை நீக்க அது தொடர்பில் ஆராய்கிறோம். குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் , கட்சியின் கொள்கை தொடர்பில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். மிக விரைவில் கட்சியின் தேசிய மாநாட்டையும் நடாத்த உள்ளோம்.

டக்ளஸின் வீழ்ச்சிக்கும், அநுராவின் எழுச்சிக்கும் சமூக வலைத்தளங்களே காரணம். சமூக வலைத்தளங்கள் ஊடாக எனக்கு எதிராக பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டனர்.

தற்போது சமூக ஊடகங்கள் குடிசை கைத்தொழில் போன்று பலருக்கும் வருமானம் ஈட்டிக் கொடுக்கிறது. என்னுடைய பெயரைப் பயன்படுத்தி அவர்கள் வருமானம் பெற்றுக் கொள்வதால், அவர்களின் வருமானத்தை தடுக்க விரும்பாததால், அவர்களின் வீடியோக்களை பெரிதுபடுத்தவில்லை.

முன்னைய காலங்களில் செய்திகளை பத்திரிகைகள் , தொலைக்காட்சிகள் , வானொலிகள் ஊடாகவே பார்க்க முடியும். தற்போது கையில் போனுடன் , மலசல கூடம் முதல் படுக்கையறை வரையில் சென்று வீடியோக்களை பார்க்க கூடிய நிலைமை இருப்பதால் , அது இலகுவில் மக்கள் மத்தியில் சென்றடைகிறது.

அவ்வாறான சமூக ஊடகங்கள் ஊடாகவே என் மீது அவதூறுகள் பரப்பப்பட்டன. குறிப்பாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் எனக்கு எதிராக அவதூறுகளை பரப்பினார். அவர் நாவற்குழி பகுதியில் உள்ள நீரேந்து பிரதேசத்தை நிரப்பி அங்கு ஒரு பெற்றோல் செட் போட முனைந்தார். அதற்காக என்னிடம் உதவி கோரினார்.

அந்த இடத்தில் நிறுவினால் வெள்ள அனர்த்தம் ஏற்படும் என்பதுடன், அது பெற்றோல் செட் போடுவதற்கு உகந்த இடமில்லை என்பதனால , அதற்கு நான் அனுமதி பெற்றுக்கொடுக்க உதவவில்லை.



அதேவேளை, கட்சியின் நிதி தேவைக்காக அவருடன் சில வர்த்தக உறவுகளையும் பேணி வந்தேன். ஆனால் அவர் நேர்மையற்றவராக முறைகேடுகளில் ஈடுபட்டமையால், அவருடனான வர்த்தக உறவை கைவிட்டேன். அதனாலேயே, அவர் என் மீது தேர்தல் காலத்தில் அவதூறுகளை பரப்பினார். அது கூட என் தோல்விக்கு காரணமாக அமைந்தது." என்றார். (ஐ-05)

## கிளிநொச்சியில் மலேரியா அறிகுறிகளுடன் நோயாளி ஒருவர் அனுமதி!

கிளிநொச்சி, டிச. 20

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மலேரியா நோய் அறிகுறிகளுடன் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆபிரிக்க நாடான கானாவிலிருந்து வருகை தந்த ஒருவரே மலேரியா தொற்றுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகளின் பின், அவருக்கு மலேரியா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு வைத்தியர் அ.நிமால் தெரிவித்துள்ளார். (ஐ-113)

## இந்திய எண்ணெய் குழாய் தொடர்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை

### - வெளிவிவகார அமைச்சர் விளக்கம் -



(கொழும்பு, டிச. 20)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் இந்தியாவுக்குச் சென்று வந்த போது, இந்திய எண்ணெய் குழாய்களை இலங்கையில் அமைப்பது தொடர்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் அறிவிப்பதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு இடையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள எண்ணெய்க் குழாய் நிர்மாணப் பணிகள் குறித்து அமைச்சர் இதன் போது தெளிவுபடுத்தினார். (ஐ)

## ஹெரோயினுடன் மூன்று பேர் கைது!

(கல்கிசை, டிச.20)

கல்கிசையில் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை, கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சுற்றிவளைப்புக்களின் போதே கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படோவிட்ட மற்றும் கட்டுகுருந்துவத்தை ஆகிய பிரதேசங்களில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கல்கிசை மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 மற்றும் 29 வயதுடையவர்கள் ஆவர்.

மூன்று சந்தேக நபர்களிடம் இருந்தும், 10 கிராம் 660 மில்லி கிராம் ஹெரோயின் , 05 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 06 கிராம் 350 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-06)

## கல்விச் சீர்திருத்தத்துக்கு அப்பாலும் மாற்றத்தை எதிர்பார்க்கும் மக்கள்!

### - பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய விளக்கம்-



(கொழும்பு, டிச 20)

கல்விச் சீர்திருத்தங்களுக்கும் அப்பால் பரந்துபட்ட மாற்றமொன்றை மக்கள் கோருவதாகவும், பாடசாலைகளுக்கு இடையில் நிலவும் இடைவெளி இல்லாமலாக்கப்படுவதுடன், தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களான, ஆசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை இல்லாமலாக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், அதை தமது தொழிலையும் தாண்டிய ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

திரு. கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட கல்விப் புரட்சிக்கு அப்பால் விரிவான கல்வி மாற்றமொன்று தேவைப்படுவதாகவும், அதனை நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேசிய கல்வி முகாமைத்துவ முறைமையின் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், எதிர்கால சந்ததியினரை அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய நவீன தொழிநுட்ப உலகிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மோசடியான பட்டப்படிப்பு நிறுவனங்களிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அதற்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தரம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, மீபே தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கமல் பத்மசிறி, அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவின் மேலதிக செயலாளர் சந்திமா ஜானகி, தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பத்மினி ரணவீர ஆகியோர் உட்பட அந்த நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ-06)

# கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்துக்கு ஜனாதிபதி செயலணி ஸ்தாபிப்பு!

கொழும்பு, டிச. 20

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட "தூய இலங்கை" நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செயலணியில், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என். எஸ். குமாநாயக்க,இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பதில் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. எல். ஏ. சமன் பிரியந்த, நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர், பொறியியலாளர் குமுது லால் டி சில்வா, ஐ. எஸ். ஜயரத்ன, கிஹான் டி சில்வா, சந்தியா சல்காது, கலாநிதி காமினி பட்டுவிடகே, கலாநிதி அனுருத்த கமகே, தில்ருக் வன சிங்ஹ, தீபால் சூரியாரச்சி, சிசிர அமரபந்து, கிரிஷாந்த குரே, ஜயது பெரேரா, ருவன் வீரசூரிய, தயான் கருணாரத்ன ஆகியோர் ஜனாதிபதியினால் தெரிவுசெய்யப்பட்ட, "தூய இலங்கை" நிகழ்ச்சித் திட்டத்தின் செயலணி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் குறித்த அதிவிஷேட வர்த்தமாணி நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஜனாதிபதி செயலணியின் செயற்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டு, வர்த்தமாணியில் வெளியிடப்பட்டுள்ள பணிகளின் விவரம் வருமாறு :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ்,

**i.** சமூக, கலாசார மற்றும் ஒழுக்கவியல் எழுச்சி மூலம் சமூகத்தை, மிகவும் அபிவிருத்தியடைந்த நிலைமைக்கு உயர்த்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக "தூய இலங்கை - Clean Sri Lanka" நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், வழிநடத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் உரிய கால எல்லையொன்றுக்குள் பூர்த்தி செய்தல்.

**ii.** இந்த நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் அமைப்புக் கட்டமைப்பு ஒன்றை தயாரித்தல்.

**iii.** "தூய இலங்கை - Clean Sri Lanka" நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் அறிவுடைய அறிஞர்கள், தொழில்வாண்மையாளர்கள், விசேட நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் விடயம் சார்ந்த அறிவு மற்றும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்.

**iv.** அரச மற்றும் பகுதியளவு அரசதுறை, தனியார்துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி தரப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் தொழிசார் அமைப்புக்கள், சமூகம் மற்றும் மக்கள் அமைப்புக்கள், வெகுசன ஊடக மற்றும் தொடர்பாடல் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், மத ரீதியான அமைப்புக்கள், தொழிநுட்பம் வழங்குனர்கள் மற்றும் புத்தாக்குனர்கள், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் போன்ற தரப்பினர்களை இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக இணைத்துக்கொள்ளும் கட்டமைப்பு ஒன்றை தயாரித்தல்.

**v.** "தூய இலங்கை - Clean Sri Lanka" நிதியத்திற்கான நிதி வழங்குதல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு "தூய இலங்கை - Clean Sri Lanka" நிதியத்தைப் பயன்படுத்துதல் தொடர்பில் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குதல்.

**vi.** இந்நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக அரச நிறுவனங்கள், தனியார் துறை, சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் போன்ற பல்வேறு தரப்பினர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை இனம் காணல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை "தூய இலங்கை - Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்தல்.

**vii.** இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறுகளின் நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை இனம் காணல், வகுத்தல் மற்றும் அத்தகைய சட்டங்களை நீண்டகாலத்திற்கு செயல்வலுப்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கும் நிறுவன ரீதியான சட்டகமொன்றைத் தாபித்தல்.

**viii.** நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், வழிநடாத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் நிலைபேறானதாக பேணிச் செல்வதற்காக டிஜிட்டல் மயப்படுத்தலைப் பயன்படுத்தல்.

**ix.** அனைத்து தரப்பினர்களையும் சாத்தியமான முறையில் ஊக்குவித்தல் மற்றும் தொடர்புபடுத்துவதற்காக பல்வகை தொடர்பாடல் மூலோபாயம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல். (ஐ-05)

## அரிசி இறக்குமதிக்கு அவகாசம் நீட்டிப்பு!



(கொழும்பு, டிச. 12)

அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை நீடிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரிசியை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, அரிசி இறக்குமதியை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பு எதிர்வரும் 24ஆம் திகதி வெளியிடப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரிசி ஏற்றுமதிக்கு அரசாங்கம் வழங்கிய கால அவகாசம் இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது. அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் நீடிக்கப்படாவிட்டால், இன்று நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி கையிருப்பை மீண்டும் ஏற்றுமதி செய்ய நேரிடும் என இலங்கை சுங்கத்தின் ஊடகப் பேச்சாளரும், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சிவலி அருக்கொட தெரிவித்தார்.

கடந்த 4ஆம் திகதி முதல் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியதையடுத்து நேற்று பிற்பகல் வரை தனியார் துறையினர் 35,600 மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ளனர். அந்த அரசி தொகையில் சுமார் 20,000 மெற்றிக் தொன் நாட்டரிசியும், மேலும் 16,000 மெற்றிக் தொன் சிவப்பரிசியும் இருப்பதாக சுங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தால் முன்பதிவு செய்யப்பட்ட 52,000 மெட்ரிக் தொன் அரிசி இருப்பு துறைமுகத்துக்கு வர உள்ளது. (ஐ-05)

## சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட இலத்திரனியல் பொருள்கள் பறிமுதல்!



கொழும்பு, டிச. 20

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட ரூபா ஐந்து கோடி பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்களில் முதல் இரு சந்தேகநபர்களும் இன்று அதிகாலை 12.30 மணியளவில் துபாயிலிருந்து வந்த விமானத்தினூடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் 38 மற்றும் 25 வயதுடைய கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர்களாவர்.

மூன்றாவது சந்தேகநபர் துபாயிலிருந்து இன்று காலை 09.45 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இவரும் ஒரு வர்த்தகராவார். இவருக்கு வயது 32.

சந்தேக நபர்களிடமிருந்து 309 கையடக்கத் தொலைபேசிகள், 08 கையடக்கக் கணினிகள், கையடக்கத் தொலைபேசி உபகரணங்கள், 12 மடிக் கணினிகள், 02 மக்புக் கணினிகள், 04 ஐபாட், 20 சிமார்ட் மணிக்கூடுகள், 05 ரௌட்டர்கள் மற்றும் 30 காதில் பொருத்தும் ஸ்பீக்கர்கள் என்பன சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மூவரையும் தடுத்து வைத்துள்ள கட்டுநாயக்க விமான நிலையை சுங்க அதிகாரிகள், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-06)

## பிரேம் தக்கர் பிணையில் விடுதலை!

(கொழும்பு, டிச. 20)

கோல்மார்வல் அணியின் உரிமையாளரான இந்திய பிரஜை பிரேம் தக்கரை பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கண்டி, பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற "லங்கா ரி 10 சூப்பர் லீக்" கிரிக்கெட் போட்டியில் ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரேம் தக்கர் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரேம் தக்கர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, பிரேம் தக்கரை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே , பிரேம் தக்கரை 05 இலட்சம் ரூபா ரொக்க பிணை மற்றும் 50 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

மேலும், பிரேம் தக்கருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விளையாட்டு ஊழல் தடுப்பு பிரிவில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-06)





# ஜெய்ப்பூர் விபத்தில் 8 பேர் உயிரிழப்பு ரூ. 2 லட்சம் நிவாரணம் அறிவித்த மோடி

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் - அஜ்மீர் தேசிய நெடுஞ்சாலையில் ஜெய்ப்பூர் அருகே பங்ரோதா என்ற பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று அதிகாலை காலை 5.30 மணி யளவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது

இரசாயனம் ஏற்றி இருந்த டேங்கர் லொறி ஒன்று பெற்றோல் நிரப்புவதற்காக வந்த போது அங்கு நிறுத்தப் பட்டிருந்த கியாஸ் லொறி மீது பயங்கரமாக மோதியதில் குறித்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது

40-க்கும் மேற்பட்டவர்கள் புகை மூட்டத்திற்குள் ளும், தீப்பிடித்த லொறிகளுக்கும் சிக்கிக்கொண்டனர். இது பற்றி தகவல் அறிந்ததும் பல்வேறு பகுதிகளில் இருந்து 20-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் விரைந்து வந்து பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். அதன் பிறகு மீட்பு பணிகள் நடந்தன. அப்போது 8 பேர் கருகி பலியாகி இருப்பது தெரிய வந்தது.

தீக்காயங்களுடன் 37 பேர் உயிருக்கு போராடிக்கொண் டிருந்தனர். அவர்களை பொலிஸாரும் , தீயணைப்பு படை வீரர்களும் மீட்டு ஜெய்ப்பூரில் பல்வேறு மருத்து வமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கோர தீ விபத்தில் 40-க்கும் மேற்பட்ட டேங் கர் லொறிகள் முழுமையாக எரிந்து சாம்பலாகி விட்ட நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

எத்தனை வாகனங்கள் முழுமையாக எரிந்து நாசமா னது என்று பொலிஸார் கணக்கு எடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் பிரதமர் மோடி குறித்த தீ விபத்து சம்பவம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்த வர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறேன்.

மேலும் தீவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயி ரம் நிவாரண நிதியாக வழங்கப்படும் எனவும் தெரி வித்துள்ளார்.

# சென்னையில் மிதமான மழைக்கு வாய்ப்பு வானிலை ஆய்வு மையம் தகவல்!



நேற்று, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத் தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, இன்று மத்தியமேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிக ளில் நிலவுகிறது. இது, அடுத்த 12 மணி நேரத்தில், வடக்கு திசையில் நகர்ந்து, மத்தியமேற்கு வங்கக் கடல் பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும். அதன் பிறகு, இது அதற்கடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு- வடகிழக்கு திசையில் நக ரக்கூடிய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

22-ந் திகதி முதல் 24-ந் திகதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25-ந் திகதி மற்றும் 26-ந் திகதி தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக் கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத் துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரு சில பகுதிகளில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை $30^\circ$ செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-$25^\circ$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒருசில பகுதிகளில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-$31^\circ$ செல்சி யஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-$25^\circ$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இன்று வடதமிழக கடலோரப்பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தி லும் இடையிடையே 60 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றார்கள்.

# அரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலா காலமானார்!



இந்திய தேசிய லோக் தள தலைவரும் அரியானா மாநிலத் தின் முன்னாள் முதல்வருமான ஓம் பிரகாஷ் சௌதாலா மாரடைப் பால் காலமானார். அவருக்கு வயது 89.

குருகிராமில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை மார டைப்பு ஏற்பட்டு காலமானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரியானா மாநிலத்தின் முதல்வராக 1989ஆம் ஆண்டு முதல் நான்கு முறை பதவி வகித்து ஓம் பிரகாஷ் சௌதாலா சாதனை படைத்துள்ளார். அவர் கடைசியாக மாநில முதல்வராக 1999ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓம் பிரகாஷ் சௌதாலா மறைவுக்கு அரசியல் தலை வர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# தொடர்ந்தும் அபாய நிலையில் நீடிக்கும் டெல்லி காற்று மாசு!



டெல்லியில் காற்றின் தரம் தொடர்ந்து அபாயகர நிலையிலேயே தொடர்கிறது. இன்று காலை நிலவரப்படி டெல்லி காற்று மாசின் அளவு 433 ஆக பதிவானது. இந்த தகவலை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் காற்றின் தரக் குறியீடு பூஜ்ஜி யத்தில் இருந்து 50 வரை இருந்தால் "நல்லது" என்றும் 51 முதல் 100 வரை இருந்தால் "திருப்திகரமானது" என்றும் 101 முதல் 200 வரை இருந்தால் "மிதமானது" என்றும் 201 முதல் 300 வரை இருந்தால் "மோசமானது" என்றும் 301 முதல் 400 வரை இருந்தால் "மிகவும் மோசமானது" என்றும் 400 முதல் 500 வரை இருந்தால் "அபாயகரமானது" என்றும் வகைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

அந்த வகையில், இன்று டெல்லியில் காற்றின் தரம் அபாயகர அளவில் இருந்தது. அங்கு இன்றைய வெப்பநிலை 7.5 டிகிரி செல்ஷியஸ் ஆக பதிவானது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது. வானிலையை பொருத்தவரை பகலில் மேக மூட்டமாக காணப்படும் என்றும் அதிகபட்ச வெப்ப நிலை 24 டிகிரி செல்ஷியஸ் ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



சமூக ஊடகங்களின் தீமையை மட்டுமே கண்டு ஒதுங்கக் கூடாது. எந்த ஒரு புதுமையிலும் நாணயத்தின் இருபக்கம் போல நன்மை தீமை இரண்டும் சேர்ந்தே இருக்கும். பாலையும் நீரையும் பிரித்தறியும் அன்னமாக மாறுங்கள். சமூக ஊடகங்கள் வரமா? சாபமா? என்று கேட்டால் தீக்காய்வார் போல சமூக ஊடகத்தை பயன்படுத்தும் போது நிச்சயம் அது வரமே.

# சமூக ஊடகங்கள்: வரமா? சாபமா?

ஆதி மனிதன் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களை தெரிவிக்கவும் பயன்படுத்திய "பறை" ஒலியே இந்த உலகின் முதன் முதல் ஊடகமாகும். பின்பு புறாவில் தூது, ஒற்றர்கள் மூலம் செய்தி, அஞ்சல் மூலம் தகவல், தொலைபேசி வழி என கற்காலம் தொடங்கி கணினி காலமான இன்று வரை சமூக ஊடகத்தின் பரிணாம வளர்ச்சி பல கட்டங்களை கடந்து அசாத்திய முன்னேற்றம் பெற்றுள்ளது. அன்றாட வாழ்வில் இருந்து பிரிக்க இயலாது வாழ்வின் அங்கமாகிவிட்டது. இந்த நிலையில் சமூக ஊடகங்களின் வளர்ச்சியும் தாக்கமும் வரமா ? சாபமா ? என்ற கேள்வி அனுதினமும் பேசுபொருளாகிவிட்டது.

மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்கவும், உலகில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், நமது அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்வது இந்த சமூக ஊடகங்கள். இன்று மக்களிடையே மிகப் பிரபலமான சமூக ஊடகங்களாக காணப்படுவது கூகுள், பேஸ் புக், ட்விட்டர், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம், ஸ்கைப், யூடியுப் போன்றவையும் இன்னும் பல சமூக வலைத்தளங்கள் ஆகும்.


அரசியல்வாதிகள் சமூக ஊடகங்களின் தாக்கத்தை நன்கு அறிந்தததனால் தங்கள் அரசியல் வியூகத்தில் இத்தகைய ஊடகங்களை தவறாமல் பயன்படுத்துகின்றனர். தங்கள் கொள்கைகளையும் கருத்துகளையும் இளைய சமூகத்திடம் புகுத்த இது போன்ற சமூக ஊடகங்களே ஆகச் சிறந்த வழி என்று கண்டறிந்துள்ளனர்.

சர்க்கரையால் ஈர்க்கப்படும் எறும்பாக, இளைஞர்களை ஈர்க்கும் இந்த சமூக வலைத்தளங்கள் எத்தகைய தாக்கத்தை உருவாக்குகிறது என்பது நம் முன் மிகப் பெரிய கேள்வி.

சமூக ஊடகங்களினால் உருவாகும் பிரச்சனைகள் பல. அதிலும் தலையாயதாக கருதப்படுவது கால விரையம். இளைஞர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டிய நேரத்தை வகை தொகையில்லாமல் வீணடிக்கின்றனர். சில பிரபலமான சமூக வலைத்தளங்களை உருவாக்கியவர்கள் அதில் செலவிடும் நேரத்தை அறிந்தோம் என்றால், நாம் செலவிடும் நேரத்தின் அருமையை உணர்வோம். "பேஸ் புக்" மார்க் சக்கர்பெர்க், 2004 - 2014 வரை 15 பதிவுகள் தான் பதிந்துள்ளார். "ட்விட்டர்" ஜேக் டார்சி, சமூக நலம் மற்றும் அரசியல் பார்வை தொடர்பான விஷயங்களை மட்டுமே பதிவு செய்கிறார். "இன்ஸ்டா கிராம்" கெவின் சிஸ்ட்ரோம் வெறும் 40 படங்கள் மட்டுமே பதிந்திருக்கிறார். முக்கிய வலைதளங்களின் பிரம்மாக்கள் அதில் பெரிதாக இயங்காத போது நாம் நம் பொறுப்பை உணர வேண்டும்.

இத்தகைய ஊடகங்களின் பாதுகாப்பு குறித்த அச்சம். படங்கள் பதிவுகள் எதைப் பதியும் பொழுதும், தனிப்பட்ட விபரங்களை பகிரும்போதும் குறிப்பாக பெண்கள் மிக கவனமாக இருக்க வேண்டியது அவசியம். இத்தகைய வலைதளங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை பயன்படுத்தும் போதிய அறிவு நமக்கு வேண்டும். சமீபத்தில் படித்த செய்தி, ஒரு பெண்மணி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும் சுற்றுலா செல்வதை அனைவரும் அறியும் படி பெருமிதத்துடனும் மகிழ்வுடனும் தன்னுடைய வலைப் பக்கத்தில் பதிந்துள்ளார். திரும்பி வரும்போது வீட்டில் இருந்த அனைத்து பொருட்களும் களவாடப்படிருந்தன . அந்த பதிவின் மூலம் நிகழ்ந்த துயரம் அது என பின்னர் விசாரணையில் தெரியவந்துள்ளது. எதை பகிர்வது என்பதை விட எதை பகிரக் கூடாது என்பதில் அதீத எச்சரிக்கை அவசியம்.





சமூக ஊடகங்களில் தரம் குறைந்த முதிர்ச்சியற்ற அவசர விமர்சனங்கள், கருத்துப் பதிவுகள். ஒபாமா தொடங்கி உள்ளூர் உலகப்பன் வரை ஈவு இரக்கம் இல்லாமல் விமர்சன கணைகள் வீசப்படுகிறது. கல்லூரி மாணவர் ஒருவரை அவரது சக மாணவர்களே தரக்குறைவாக விமர்சிக்க அந்த மாணவன் தற்கொலை செய்து கொண்டது பெரும் துயரம். ஆரோக்கியமான விமர்சனங்கள், விவாதங்கள நிச்சயம் தேவை, ஆனால் வரம்பு மீறி ஒருவரைப் பொது தளத்தில் விமர்சிப்பது அநாகரிகமானது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஆப்கானிஸ்தானில் சோகம்: இரு வேறு சாலை விபத்து 52 பேர் பலி!



மத்திய ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த இரு வேறு சாலை விபத்துகளில் மொத்தம் 52 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

காபூல்-காந்தகார் நெடுஞ்சாலையில் புதன்கிழமை இரவு பயணிகள் பேருந்துடன், எண்ணெய் டேங்கர் லொறி நேருக்கு நேர் மோதியது.

இதே நெடுஞ்சாலையின் மற்றொரு இடத்தில் பயணி கள் பேருந்தும், சரக்கு லாரியும் மோதிக் கொண்டன.

இந்த இரு விபத்துகளிலும் பெண்கள், குழந்தை கள் உட்பட மொத்தம் 52 பேர் பலியாகினர். மேலும் 76 பேர் காயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த பலர் காபூல் மருத்து வமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என கஜினி மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் ஹபீஸ் உமர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் மோசமான சாலைகள் மற்றும் டிரைவர்களின் கவனக்குறைவு காரணமாக விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## செல்ஃபியை பதிவிட்ட இந்திய சி.இ.ஓ.வுக்கு மூஞ்சி காட்டிய பைனான்ஸ் நிறுவனர்!



கிரிப்டோகரன்சி பிட்கா யின் துறையில் பிரதான மாக விளங்குவது ஜப்பா னில்இயங்கும்பைனான்ஸ் ஐடீயையெஉ்நஸ நிறுவ னம். இந்த நிறுவனத்தின் இணை நிறுவனர் சீனா வைச் சேர்ந்த சாங்பெங் சாவோ [Changpeng Zhao].

பிளாக்செயின் துறையில் இயங்கும் பயர் செயின் (5ire-Chain) என்ற நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி [CEO] ஆக இருப்பவர் இந்தியாவைச் சேர்ந் தவர். இவர்கள் இருவரும் சமீபத்தில் கலந்துகொண்ட நிகழ்ச் சியின்போது செல்பி எடுத்துள்ளனர்.

அதை பிரதிக் கௌரியின் பயர் செயின் (5ireChain) நிறு வனம் தனது அதிகாரப்பூர்வ சமூக வலைதள பக்கங்களில் பகிர்ந்துள்ளது. இதை பார்த்த சாங்பெங் சாவோ, அனுமதி இல்லாமல் தனது புகைப்படத்தை பகிர்ந்துகொண்டதற்காகப் பிரதிக் கௌரியை கடிந்துகொண்டார்.

என்னுடன் எடுத்த செல்பியை எப்படி உபயோகப்படுத்தக் கூடாது என்பதற்கு இது ஒரு உதாரணம், நாங்கள் பேசிக் கொள்ளக் கூட இல்லை, நிகழ்ச்சியில் வெறும் செல்பி மட்டும் தான் எடுத்துக்கொண்டோம் என்று அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறினார்.

இதனையடுத்து அந்த இடுக்கையை பயர் செயின் நிறுவ-னம் நீக்கி, எங்கள் நிறுவனர் & CEO பிரதிக் கௌரி மற்றும் சாங்பெங் சாவோ ஆகியோருக்கு இடையே எந்த ஒத்துழைப்பு அல்லது வணிக கூட்டணியையும் குறிக்கவில்லை என்று விளக்கம் அளித்துள்ளது.

## உயிரிழந்தவர்களுடன் டீ குடிக்க ஆசை 3 பேரின் பெயரை கூறிய அதிபர் புதின்



வலிமையான உலக தலைவர்களில் ஒருவராக ரஷ்ய அதிபர் புதின் கருதப் படுகிறார். இவ்வருடத் திற்குரிய வருடாந்திர ஆண்டு இறுதி செய்தி யாளர் சந்திப்பில் புதின் கலந்துகொண்டுபல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார்.

அப்போது வாழும் அல்லது உயிரிழந்த உலக தலைவர்கள் யாரோடு நீங்கள்ஒரு கோப்பை தேநீர் அருந்த விரும்புகிறீர்கள் என்று கேட்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த புதின், முன்னாள் ஜேர்மன் அதிபர் ஹெல்முட் கோல், முன்னாள்பிரான்ஸ்அதிபர் ஜாக் சிராக் மற்றும் இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி ஆகிய மறைந்த தலைவர்களுடன் தேநீர் அருந்த விரும்புவதாக புதின் தெரிவித்தார்.

மேலும் முன்னாள் பிரான்ஸ் அதிபர் ஜாக் சிராக் -யிடம் இருந்து தான் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டதாக புதின் அவரை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து பேசிய புதின் ஆசியாவில், சீனா மற்றும் இந்தியாவுடன் நட்புறவு கொண்டுள்ளதாக தெரிவித்தார். இந்திய பிரதமருடன் எனக்கு மிகவும் அன்பான உறவு உள்ளது என்றும் புதின் குறிப்பிட்டார்.

# உக்ரைன் விவகாரத்தில் டிரம்ப் உடன் பேச தயார்: ரஷ்ய அதிபர் புதின் தகவல்





சமீபத்தில் நடைபெற்ற அமெரிக்க அதி பர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளரான முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார்.

கடந்த 2016 முதல் 2020 வரை டிரம்ப் அதிபராக இருந்தபோது சர்வதேச அரசியல் சூழலில் இணக்கத்தைப் பேணி வந்தார். இந்நிலையில் வரும் ஜனவரி மாதத்தில் டிரம்ப் மீண்டும் அதிபராக பதவி ஏற்க உள்ளார்.

இஸ்ரேல்-பாலஸ்தீன போர் மற்றும் உக்ரைன்-ரஷ்ய போர் ஆகியவை டிரம்ப் முன் இருக்கும் பெரிய சவால்கள். அதி-பராக தேர்வு செய்யப்பட்ட டிரம்ப் உக் ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை தொடர்பு கொண்டு பேசினார். மேலும், ரஷ்ய அதி பர் புதினுடனும் தொலைபேசி வாயி லாக உரையாடினார். அப்போது, உக் ரைன் போரை நிறுத்துவதற்கான தீர்வு குறித்து பேசப்பட்டதாக செய்தி வெளியா னது.

டிரம்ப் அதிபரானதற்கு வாழ்த்து தெரிவித்த புதின், அமெரிக்கா விரும்பி னால் தொடர்பை தொடருவோம் என தெரிவித்தார்.

இந்நிலையில், உக்ரைன் விவகாரத் தில் சமரசம் செய்துகொள்ள தயார் என ரஷ்ய அதிபர் புதின் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு டிரம்புடன் இணைந்து போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த தவும், உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்துகொள்ள தயாராக இருப்பதாகவும், உக்ரைன் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த எந்த நிபந்தனையும் இல்லை என அதிபர் புதின் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

## தொழிலதிபர் முகமது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தீர்மானத்தை அறிவிப்பதற்காக முன்னாள் பொலீஸ்மாஅதிபர், அவரது புதல்வர் ரவித்து குணவர்த்தன உட்பட பிரதிவாதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இதன் போது மரண தண்டனைக்கு எதிராகப் பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறையீட்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தார். மேலும் பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும் திகதியை உயர் நீதிமன்றம் குறிப்பிடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை எதிர்பார்க்கும் பட்சத்தில், தண்டனையை நிறைவேற்றும் திகதி அவர்களுக்கு மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அதற்கமைய தண்டனையை நிறைவேற்றும் திகதி தொடர்பில் உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் இது தொடர்பில் உயர் நீதிமன்றமே முடிவெடுக்க முடியும் எனவும், இது தொடர்பில் தாம் உத்தரவு பிறப்பிக்க முடியாது எனவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்தார். (ஐ)

## வியற்நாம் அகதிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகில் வந்தவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வியட்நாமின் - ரோஹின்காவில் இருந்து வெளிநாடொன்றில் புகலிடம் கோரும் நோக்கோடு சுமார் 120 பேர் வரை புறப்பட்டதாகவும், அவர்களில் ஐவர் சர்வதேசக் கடற்பரப்பில் நோய்வாய்ப்பட்டு படகினுள் இறந்து போனதனால் அவர்களின் சடலங்களை நடுக்கடலில் வீசியதாகவும் படகில் வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள், பெண்கள் உட்பட பெருமளவானோரை ஆட்கடத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தினர் என்ற சந்தேகத்தின் பேரில் படகு ஓட்டிகள் உட்பட பன்னிரெண்டு பேர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் நேற்று வியாழக்கிழமை இந்தப் படகு 102 பேருடன் கரை ஒதுங்கியது. படகு திசைமாறி வந்து கரையொதுங்கியதாகவும், படகில் 35 சிறுவர்களும், ஒரு கற்பிணி தாயும் இருந்ததாகவும் அறியப்பட்டது.

படகில் உள்ள சிலர் மயக்கநிலையிலும், சுகவீனமுற்றும் காணப்பட்டுள்ளனர். படகை மீட்ட கடற்படையினரும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும் படகில் இருந்தவர்களுக்கான உணவு மற்றும் நீராகாரங்களை நேற்று ஏற்பாடு செய்தனர்.

இப்படகினை முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கரை சேர்ப்பதில் சிரமங்கள் இருந்தமையினால் இப்படகு திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். படகில் உள்ளவர்களைத் திருகோணமலை தி/ஜமாலியா வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படகில் வந்தவர்களின் நலன்புரி ஏற்பாடுகளுக்காகச் சுகாதாரத்துறையினர் உட்பட அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் தயார் நிலை வைக்கப்பட்டுள்ளன.

மொழிப் பிரச்சினை காரணமாகப் படகில் வந்தவர்களின் முழுமையான விவரங்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் காற்றுத் திசை மாறி வந்தார்களா அல்லது இலங்கையில் குடியேறும் நோக்கத்தோடு வந்தார்களா என்பதில் சந்தேகமிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-06)

## கைது செய்யப்பட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளராக செயற்பட்டிருந்த குலசிங்கம் திலீபன் கடந்த 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். அதன் பின்னர், கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்தும், அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுவதாக அண்மையில் அறிவித்திருந்தார். (ஐ-12)

## நத்தார், புது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இதையெல்லாம் உங்களுக்காகச் செய்ய எங்களுக்கு உங்கள் உதவி தேவை. உங்களைச் சுற்றியுள்ள அந்நியர்கள் மற்றும் சந்தேகத்துக்கிடமான நபர்களைப் பற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்கவும். உங்கள் சொத்து மற்றும் பணத்தைப் பற்றி எப்போதும் கவனமாக இருக்கவும்." என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-12)

## முன்னாள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான கருணா அம்மான் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்குச் சென்று, கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கடத்தப்பட்டமை தொடர்பிலான விசாரணைக்காக வாக்குமூலம் அளித்ததாகக் கருணா அம்மான் தெரிவித்துள்ளார். (ஐ-05)

## அர்ஜுன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (ஐ)

# அரச அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்!

## - அரச அதிபர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை-

கொழும்பு, டிச. 20

மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும், புதிய குழுவின் ஊடாக அரசியல் செல்வாக்கை பொருட்படுத்தாமல், அவை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள "நில மெதுர" கட்டிடத்தில் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்ற மாவட்ட அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க அதிபரிலிருந்து மாவட்டச் செயலாளர் என பதவிப் பெயர் மாற்றம் பெற்ற இந்த சேவையானது 200 வருடங்கள் பழமையானது எனவும், எமது நாட்டை புதிய திசையில் வழிநடத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

சரிவடைந்திருக்கும், கட்டமைப்பை மீள உருவாக்க நாம் தயாரா? இல்லையா? என்பது குறித்து எம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

மக்கள் ஆணையின் எதிர்பார்ப்புகளுக்கு அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அரச சேவையும் பொறுப்புக் கூற வேண்டும் என்பதையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

அரச சேவையில் இருக்கின்ற கதிரை தொடர்பான பிரச்சினை தனக்கு இல்லை எனவும், கதிரையில் அமர வைப்பதற்கு யார் இருக்கின்றார்கள் என்ற பிரச்சினையே தனக்கு இருப்பதாகவும ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்வாங்கி, அவற்றுக்கு இசைவான மாற்றங்களை செய்துகொண்டு, தமது துறைக்கு தலைமைத்துவம் வழங்கி அதனை வெற்றியை நோக்கி வழிநடத்தும் கதிரைகள் வெற்றிடமாக காணப்படுகின்றதென கூறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது இந்திய விஜயத்தின் போது 1500 அதிகாரிகளை இந்தியாவிற்கு அனுப்பி பயிற்சி அளிக்க இணக்கம் எட்டப்பட்டது என்றும் கூறினார்.

அடுத்த வருடத்தில் உயர்தரத்தில் சித்தியடையும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு அரசாங்கத்தின் புலமைப் பரிசில்களை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சில நிறுவனங்கள் மற்றும் பதவிகள் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டன என்பது பிரச்சினையாக உள்ளதாகவும், எமது நாட்டின் அரச சேவையை முறையான அரச பொறிமுறையாக மாற்றும் சவால் எம்முன் காணப்படுவதால், அதற்கான புதிய வியூகம் ஒன்று அவசியப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எமது நாட்டில் தற்போதுள்ள அரச நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கான புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் செல்வாக்குகளை பொருட்படுத்தாமல் அவை தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

அரச சேவையை மட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லை எனவும், ஆனால் அரச சேவையை நடத்திச் செல்வதற்கான செலவில் பிரச்சினைகள் இருப்பதால், அரச சேவையை ஒரே நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து முறையான பொறிமுறைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்த அரசியல் அதிகார அடிப்படையில் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதாகவும், அரச அதிகாரிகளின் பங்களிப்பே இந்தப் பணிகளின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணையின் 80மூ எதிர்பார்ப்புகளை அரச உத்தியோகத்தர்களே வெளிப்படுத்தியுள்ளனர் என்ற வகையில், அரசியல் அதிகார தரப்பின் பணிகளுக்கு அவர்கள் இணக்கம் மற்றும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். எனவே, இவை இரண்டும் இருவேறு முரண்பாடான குழுக்கள் அல்ல என்பதையும் இரண்டும் இணக்கமான குழுக்கள் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, அரசியல் அதிகாரம் மற்றும் பொதுச் சேவையின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் இலக்குகள் சமநிலையானதாக காணப்படுவதை கடந்த மக்கள் ஆணை வெளிப்படுத்தியிருப்பதால், இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பணியே எம்முன் உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மக்களுடன் தொடர்புபடும் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-06)

## சமூக ஊடகங்கள்: ......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகங்கள் மனிதரின் நேரத்தை களவாடியது ஒருபுறம் என்றால் அதைக் காட்டிலும் மக்களிடையே இருந்த உணர்வுப்பூர்வமான பிணைப்பை கொன்று வருகிறது என்பது வருந்தத்தக்க உண்மை. தேடித் தேடி வாழ்த்து அட்டைகள் வாங்கி, நேரில் சென்று, உளமார வாழ்த்தி அன்பை பகிர்ந்து கொண்ட தருணங்கள் மாறி, தன் சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கு கூட வாட்ஸ் அப்பிலும், பேஸ் புக்கிலும் இன்னப் பிற சமூக ஊடகங்கள் வாயிலாக வாழ்த்துகளை ஜீவனின்றி பகிர்கின்றோம். இறந்த நண்பனுக்கு இரங்கல் செய்தியாக "May ur soul RIP (Rest In Peace)" என பதிந்து விட்டு அடுத்த வேலையை நோக்கிச் செல்லும் அவலம் அரங்கேறி வருகிறது. அந்த இறந்த நண்பரின் வீட்டிற்கு செல்லவோ, அவரின் தாய் தந்தைக்கு ஆறுதல் கூறி தேற்றவோ எண்ணம் எழாத அளவிற்கு சமூக ஊடகங்களின் தாக்கம் நீள்கிறது.

எது எப்படியோ சமூக ஊடகங்களினால் சில பல தீமைகள் இருந்தாலும் மறுக்க முடியாத பல நன்மைகளும் உண்டு. அதில் முதலாவது உலகின் அனைத்துத் துறைகளின் அறிவையும் ஒரே சேர வழங்குவது. மாத, பிதா, கூகுள், கடவுள் என்பதே இந்த நவீன யுகத்தில் விளைந்துள்ள மாற்றம். புத்தகம் கொண்டு தேடித் தேடி அறிந்த அறிவெல்லாம் இன்று கையடக்கக் கணினியிலும், செல்பேசியிலும் பெற்றுவிடுகின்றனர். சமூக ஊடகங்களில் பங்கேற்காவிட்டால் அறிவின் ஒரு வாசலை நாமே அடைப்பதாகும்.

மதுரையை சேர்ந்த ஒரு இளைஞர், அங்குள்ள புராதன இடங்களை சுத்தப்படுத்துவோம்கைகோருங்கள்நண்பர்களே என்று தன்னுடைய பதிவில் கோரிக்கை வைக்க, அலை அலையென கூடிய இளைஞர்கள் மதுரையை தூய்மைப்படுத்தியது ஆச்சர்ய ஆனந்தம். எகிப்தில் ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ச்சி உண்டாக்கி அரசியல் மாற்றத்துக்கு வித்திட்ட புரட்சி நிகழ்ந்தது சமூக வலைத்தளத்தில் பதிந்த ஒரு பதிவு. கல்வி உதவியா, மருத்துவ உதவியா, அவசர அடிப்படைத் தேவைகள் பலவற்றிற்கும் கை கொடுக்கிறது சமூக ஊடகங்கள்.

100 வருட சினிமா வரலாற்றின் தலைஎழுத்தையும் மாற்றி எழுதிக் கொண்டிருக்கிறது சமூக ஊடகங்களின் வளர்ச்சி. ஒரு சில பேரின் அங்கீகாரம் கிடைக்காமல் வாய்ப்பு தேடி அலைந்து தவித்த திறமையுள்ள கூட்டம் தங்கள் குறும்படப் படைப்புகளை யூ டியூபில் பதிவேற்றி நேரடியாக மக்கள் மன்றத்தில் பந்தி வைத்து மிகப் பெரிய வெற்றிகளையும், சாதனைகளையும், வாய்ப்புகளையும் தங்களை தேடி வரச் செய்கின்றனர் நம் முதல் தலைமுறை இளைஞர்கள்.

எட்ட இருப்பினும் முகத்தோடு முகம் பார்த்து பேசும் அதிசயங்களையும், உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் நண்பர்கள், உறவுகளுடன் தொடர்பில் இருக்கவும், புத்தகம் கையில் எடுக்காத இளைஞர்களும் நொடிக்கு நொடி உலகின் அசைவுகளை விளங்கிக்கொள்ள செய்வது என இதன் பயன்கள் எல்லையற்றது. இத்தனை பயன்கள் இருக்கும் இத்தகைய சமூக ஊடகங்களில் நேர விரையம், பாதுகாப்பு இல்லை எனக் கூறி பயன்படுத்தாமல் இருப்பது அல்லது உங்கள் குழந்தைகளை அதில் இருந்து விலக்கி வைப்பது அவசர யுகத்தில் நிகழும் ஓட்டப் பந்தயத்தில் நடந்து சென்று வெற்றி பெற்றுவிடலாம் என நினைப்பது போல் சாத்தியமற்றது.

சமூக ஊடகங்களின் தீமையை மட்டுமே கண்டு ஒதுங்கக் கூடாது. எந்த ஒரு புதுமையிலும் நாணயத்தின் இருபக்கம் போல நன்மை தீமை இரண்டும் சேர்ந்தே இருக்கும், பாலையும் நீரையும் பிரித்தறியும் அன்னமாக மாறுங்கள். சமூக ஊடகங்கள் வரமா ? சாபமா ? என்று கேட்டால் தீக்காய்வார் போல சமூக ஊடகத்தை பயன்படுத்தும் போது நிச்சயம் அது வரமே.

மாறக்கூடிய உயிர்கள் மட்டுமே வாழக் கூடிய தகுதி பெறும் - இது இயற்கையின் விதி.

ஆம் காலம் மாறுகிறது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2024 இல் வெளியிடப்பெற்றது.